# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(Re-accredited with "A" Grade by NAAC)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024

தமிழ்நாடு, இந்தியா

அலுவலகம் : 0431-2407016,2407060

தொலைப்படி : 0431-2407444

மின் அஞ்சல் : coe@bdu.ac.in

முனைவர் K. துரையரசன் M.A, M.Phil., Ph.D., வலைத்தளம் : www.bdu.ac.in

தேர்வு நெறியாளர்


ந.க.எண். தே.நெ/ம.பி-2/2018 நாள்: 25.05.2018

பெறுநர்:

பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட தன்னாட்சி அற்ற கல்லூரி முதல்வர்கள்

அய்யா/அம்மையீர்

பொருள்: மாணவ/மாணவியரின் மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency), மறுக்கூட்டல் (Retotalling) விண்ணப்பத்திற்கான கட்டணம் - மாற்றியமைப்பது - தொடர்பாக.

பார்வை: 1. கடித எண்:12887/K2/2017-3/முதன்மை செயலாளர், உயர்கல்வித்துறை, தமிழ்நாடு அரசு, அவர்களின் 18.08.2017 நாளிட்ட கடிதம்.

2. மாண்பமை துணைவேந்தர் அவர்களின் 23.01.2018 மற்றும் 09.03.2018 நாளிட்ட ஆணை.

------

பார்வையில் கண்டுள்ள மாண்பமை துணைவேந்தர் அவர்களின் ஆணையின்படி ஏப்ரல் - 2018 பருவத்தேர்வு முதல் மாணவ/மாணவியரின் மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency), மறுக்கூட்டல் (Retotalling) விண்ணப்பத்திற்கான கட்டணம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஒளிநகல் (Transparency) இளநிலை/முதுநிலை (UG & PG) | : 400/- (தாள் ஒன்றுக்கு) |
| மறுமதிப்பீடு (Revaluation) இளநிலை (UG) | : 500/- (தாள் ஒன்றுக்கு) |
| மறுமதிப்பீடு (Revaluation) முதுநிலை(PG) | : 600/- (தாள் ஒன்றுக்கு) |
| மறுமதிப்பீடு (Revaluation) ஆய்வியல் நிறைஞர் (M.Phil) | : 700/- (தாள் ஒன்றுக்கு) |
| மறுக்கூட்டல் (Retotalling) இளநிலை/முதுநிலை | : 250/- (தாள் ஒன்றுக்கு) |

மேற்கண்ட பாடங்களுக்கு மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency), மறுக்கூட்டல் (Retotalling) விண்ணப்பிக்கும் மாணவ/மாணவிகள் தேர்வு முடிவு வெளியிடப்பட்ட **15 நாட்களுக்குள்** விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதன் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கல்லூரி முதல்வர்கள் மாணவ/மாணவிகளுக்கு மாற்றியமைக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இளநிலை மற்றும் முதுநிலை **தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள்** மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency) மற்றும் மறுகூட்டல் (Retotalling) விண்ணப்பத்திற்கான உரிய கட்டணத்தை இனிவரும் காலங்களில் இணையதள (online payment) வழியாக செலுத்தி அதற்குண்டான இரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து கல்லூரி முதல்வர் வழி அனுப்பிட வேண்டும். கல்லூரி முதல்வர் அவர்கள் மேற்கண்ட தகவலை மாணவ/மாணவியருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு நெறியாளர்